ஹம்பாந்தோட்டை மா நகர சபை - 2024

---

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஹம்பாந்தோட்டை மா நகர சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மா நகர சபை கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 252) பிரிவு 219 மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) உபபிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, ஹம்பாந்தோட்டை மா நகர சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மா நகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மா நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- மா நகர சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது மா நகர சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நகர சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மா நகர சபைக்கு மீளாய்வாண்டு தொடர்பாக பெற வேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் கணக்கிலிருந்து கைவிடப்பட்டிருந்ததுடன் ஜனவரி முதல் ஜுன் வரையான காலப்பகுதிக்கு உரிய பெற வேண்டியதென காணிப் பதிவாளர் அலுவலகத்தினால் உறுதிப்படுத்தப்பட்ட வருமானம் ரூபா 2.48 மில்லியன் தொகையாக காணப்பட்டது.	2025 ஆண்டின் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	காணிப் பதிவாளர் அலுவலகத்தினால் உறுதிப்படுத்தப்பட்ட வருமானம் கணக்கீடு செய்யப்பட வேண்டும்.

(ஆ)	2015 ஆண்டின் போது மா நகர சபைக்கு சொந்தமான ருஹுனு ப்ளாஸா கட்டிடத்தின் முதலாவது மாடியை வாடகைக்கு எடுத்த வாடகையாளரினால் ரூபா 11.67 மில்லியனுக்கான செலவொன்று மேற்கொண்டு நவீனமயப்படுத்தி இருந்தமையால் வாடகையாளர் செலுத்த வேண்டிய மாதாந்த வாடகையில் 50 சதவீதம் மேற்கொள்ளப்பட்ட செலவுகளுக்கு எதிரீடு செய்யவும் மீதி வாடகை நகர சபைக்கு பணமாக செலுத்துவதற்கும் இணக்கம் தெரிவிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அவற்றில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது வாடகையாளரினால் பணமாக செலுத்தப்பட்ட வாடகை மாத்திரம் காணப்பட்டமையால் மா நகர சபைக்காக வாடகையாளரினால் மேற்கொள்ளப்பட்ட மூலதனச் செலவுகளும், வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 3.09 இற்கான (எதிரீடு செய்யப்பட்ட 50 சதவீதம்) வாடகை வருமானமும், ரூபா 8.57 மில்லியன் தொகை எதிரீடு செய்த பின்னர் மீதியாக இருந்த தொகை வருமான முற்பெறுவனவுகளின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை.	2025 ஆண்டின் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	இந்த கட்டிடத்தை வாடகைக்கு கொடுத்தல் தொடர்பாக ஏற்பட்டிருந்த அனைத்து நிதிசார் கொடுக்கல் வாங்கல்களும் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(இ)	மீளாய்வாண்டிற்குரிய கூட்டுத்தொகை ரூபா 325,501 தொகைக்கான செலவுகளுக்காக கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொண்டிருக்கவில்லை.	2025 ஆண்டின் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கடன்கொடுத்தோர் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும்.
(ஈ)	மா நகர சபைக்கு 2021 திசெம்பர் 20 திகதி கிடைத்திருந்த ரூபா 925,000 இற்கான பெறுமதி உடல் விருத்தி உபகரணங்கள் மூலதனப்படுத்தி இருக்கவில்லை.	2025 ஆண்டின் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	சபைக்கு கிடைத்திருந்த உபகரணங்கள் மூலதனப்படுத்த வேண்டும்.

1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

	சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு	இணங்காமைகள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	இலங்கை சனநாயக சோசசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் 571	02 வருடங்களை மிகைத்துள்ள ரூபா 457,948 தொகைக்கான 101 பலவின வைப்பு மீதிகளை வருமானத்திற்கு எடுக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	சபையின் வருமானத்திற்கு எடுப்பதற்கு தொடர் நடவடிக்கை விரைவாக எடுக்கப்படுகின்றது என.	02 வருடங்களை மிகைத்துள்ள வைப்பு மீதிகள் தொடர்பாக நிதிப் பிரமாணக் கோவையின் குறிப்பிட்ட பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	2009 ஏப்ரல் 16 திகதி 09/2009 இலக்கங் கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கையின் 02(i)	சபையில் கடமையாற்றும் 173 ஒட்டுமொத்த பதவியணியினர் இடையே அவற்றில் 10 பேர் மாத்திரம் விரலடையாள இயந்திரத்தின் மூலம் உள்வருதல் மற்றும் வெளிச்செல்லலை உறுதிப்படுத்திய பதிவுகள் காணப்பட்டதுடன், 163 பேரின் அறிக்கைகள் அவ்வாறு காணப்படவில்லை.	கடதாசிக்கான செலவுகளை குறைக்கும் குறிக்கோளுடன் மற்றும் ஏதேனும் சந்தர்ப்பங்களில் இந்த இயந்திரம் விரலடையாளம் எடுக்கப்படவில்லை என மற்றும் புதிய இயந்திரத்தின் மூலம் அச்சுப் பிரதிகள் பெற்றுக் கொண்டு கோப்பில் இடப்படும் என.	விரலடையாள இயந்திரத்தின் மூலம் உள்வருதல் மற்றும் வெளிச்செல்லல் தொடர்பான அறிக்கைகள் வைத்திருத்தல் தொடர்பாக குறிப்பிட்ட சுற்றறிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(இ)	2019 ஜூன் 27 திகதிய திறைசேரிப் பிரதிச் செயலாளரின் 05/2019 இலக்கங் கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் பந்தி 03	சபையின் 19 சேவையை விட்டுச் சென்ற மற்றும் இறந்த ஊழியர்களிடம் கிடைக்க வேண்டிய ரூபா 92,225 தொகைக்கான கடன்மீதியை அறவீடு செய்திருக்கவில்லை.	2025 மே முதல் பிணையாளர்களிடம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	கடன் மீதிகளை அறவீடு செய்தல் தொடர்பாக குறிப்பிட்ட சுற்றறிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ஈ)	2010 திசெம்பர் 27 திகதிய தபபா/பபாகொ/2010/10 இலக்கங் கொண்ட தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கை			
	(i) பந்தி 05	அனைத்து உடன்படிக்கைகளும் 03 வருடங்களுக்கு ஒரு முறை நாளதுவரை ஆக்கப்பட வேண்டிய போதிலும் திஸ்ஸவீதியில் இரண்டு கடைகள் மற்றும் ச.தொ.ச கட்டிடத்தின் அவ்விதம் உடன்படிக்கை நாளதுவரை ஆக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	02 உடன்படிக்கைகளுக்காக எடுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளதுடன் மற்றும் ச.தொ.ச கட்டிடத்திற்காக ஆளுனரின் அங்கீகாரம் கிடைத்த பின்னர் உடன்படிக்கை மேற்கொள்ளப்படும் என.	சுற்றறிக்கையின் பிரகாரம் உடன்படிக்கை 03 வருடங்களுக்கு ஒரு முறை நாளதுவரை ஆக்கப்பட வேண்டும்.
	(ii) பந்தி 06	வாடகைக்கு கொடுத்திருந்த ஆதனங்கள் 05 வருடங்களுக்கு ஒரு முறை பெறுமதி மதிப்பீடு மேற்கொள்ள வேண்டிய போதிலும் 08 கடையறைகள் தொடர்பாக அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை.	பெறுமதி மதிப்பீடு செய்வதற்காக முற்பணம் செலுத்தப்பட்டுள்ளது எனவும் மற்றும் பெறுமதி மதிப்பீடு கிடைத்தவுடன் அதன்படி நடவடிக்கை எடுக்கப்படும் என.	சுற்றறிக்கையின் பிரகாரம் வாடகைக்கு கொடுக்கப்பட்ட ஆதனங்கள் 05 வருடங்களுக்கு ஒரு முறை பெறுமதி மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.
(உ)	2018 மார்ச் 19 திகதிய 01/2018 இலக்கங் கொண்ட திறைசேரி செயலாளரின் சொத்துக்கள் முகாமைத்துவச் சுற்றறிக்கை	ஓட்ட நிலையில் இருந்து அகற்றப்பட்டிருந்த கப் வண்டியை அப்புறப்படுத்துவதற்கு அகற்றுவதற்கு அல்லது திருத்த வேலை மேற்கொண்டு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	அகற்றுவதற்காக இயந்திரப் பொறியியலாளரின் பரிந்துரை கிடைத்துள்ளது எனவும் மற்றும் அகற்றுவதற்கு அங்கீகாரம் வேண்டப்பட்ட போதிலும் இதுவரை இணக்கம் கிடைத்திருக்கவில்லை என.	ஓட்ட நிலையில் இருந்து அகற்றப்பட்டிருந்த வாகனங்களை அப்புறப்படுத்துவதற்கு அல்லது திருத்த வேலை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2024 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினை மிகைத்த வருமானம் ரூபா 8.08 மில்லியன் தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினை மிகைத்த வருமானம் ரூபா 30.53 மில்லியன் தொகையாக காணப்பட்டது.

2.2 வருமான நிருவாகம்

2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

நகர ஆணையாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

	2024				2023			
வருமான மூலம்	மதிப்பீட்டு வருமானம்	சிட்டையிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை	மதிப்பீட்டு வருமானம்	சிட்டையிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம	திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
வீதவரி மற்றும் வரி	14,021,900	13,974,788	11,489,862	2,484,927	13,937,000	13,939,528	14,205,275	6,415,325
வாடகை	44,281,300	50,139,249	47,240,599	2,898,650	41,795,000	45,058,599	40,905,201	7,043,538
அனுமதிப் பத்திரக் கட்டணம்	3,993,700	5,864,057	4,194,057	1,670,000	4,027,000	5,558,941	4,974,331	3,340,633
ஏனைய வரு மானங்கள்	8,186,000	13,589,747	12,209,384	1,380,363	7,331,000	11,279,314	11,060,858	2,507,983
மொத்தம்	**70,482,900**	**83,567,841**	**75,133,902**	**8,433,940**	**67,090,000**	**75,836,382**	**71,145,665**	**19,307,479**

2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டின் ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை வருமானம் ரூபா 19.31 மில்லியன் தொகையாகக் காணப்பட்டதுடன், ஆண்டிற்கான சிட்டையிடல் ரூபா 83.57 மில்லியன் தொகை காணப்பட்டது. அதன்படி ஆண்டின் போது சேகரிக்கப்பட வேண்டிய ஒட்டுமொத்த வருமானம் ரூபா 102.88 தொகை எனினும், சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா	கணக்காய்வு அவதானிப்புக்களை ஏற்றுக் கொள்கின்றேன்.	நிலுவை வருமானம் சேகரிக்கும் முன்னேற்றத்தை அதிகரிக்கப்பட வேண்டியதுடன், வருமானம் மதிப்பீடு செய்தல் சரியாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

	75.13 மில்லியன் தொகையாக காணப்பட்டமையால் வருமானம் சேகரித்தல் முன்னேற்றம் 73 சதவீத மட்டத்தில் காணப்பட்டது. ஒட்டு மொத்தமாக நிலைமை அவ்வாறு காணப்பட்ட போதிலும் வீதவரி மற்றும் வரி தொடர்பாக இந்த விகிதாசாரம் 56 சதவீதம் போன்ற குறைந்த பெறுமதி ஒன்று காணப்பட்டது.		

2.2.3 வீதவரியும் வரியும்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 5661 வீதவரி அலகுகளில் இருந்து பெற வேண்டிய வீதவரி ரூபா 5.04 மில்லியன் தொகை மா நகர சபை கட்டளைச் சட்டத்தின் பிரிவு 252(1) இன் பிரகாரம் அறவீடு செய்திருக்கவில்லை. மேலும் நிலுவை மீதியில் 03 வருடங்களுக்கும் 05 இற்கும் இடைப்பட்ட மற்றும் 05 வருடங்களுக்கு மிகையான மீதிகளின் கூட்டுத்தொகை முறையே ரூபா 457,237 தொகை மற்றும் ரூபா 248,879 தொகை காணப்பட்டது.	நிலுவைத் தொகையில் ரூபா 657,491 தொகை அறவீடு செய்யப்பட்டுள்ளதுடன், மீதி நிலுவையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	சட்டத்தின பிரிவு 252(1) பிரகாரம் நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 28 நிறுவனங்களில் இருந்து பெற வேண்டிய குப்பை வரி ரூபா 559,010 தொகை அறவீடு செய்யப்பட்டிருக்காததுடன், நிலுவை மீதியில் 2020 முதல் 2022 வரையான ஆண்டுகளுக்குரிய நிலுவை மீதி ரூபா 97,250 தொகையாக காணப்பட்டது.	நிலுவைத் தொகையில் 2025 ஆண்டில் ரூபா 348,202 தொகை அறவீடு செய்யப்பட்டுள்ளதுடன், 2020 முதல் 2022 வரை நிலுவைத் தொகை அறவீடு செய்வதில் சிக்கல் நிலைமை ஒன்று காணப்படுகின்றது என.	நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும்.
(இ)	மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 82 வர்த்தகங்கள் மற்றும் கைத்தொழில்களிலிருந்து பெற வேண்டிய ரூபா 206,000 இற்கான வர்த்தகங்கள் மற்றும் கைத்தொழில் வரி அறவீடு செய்வதற்காக மாகாண சபை கட்டளைச் சட்டத்தின் பிரிவு 247 (ஆ) 4 படி நடவடிக்கை	மீதித் தொகையில் 2025 ஆண்டில் ரூபா 20,000 அறவிடப்பட்டதுடன், மீதித் தொகையை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என.	சட்டத்தின பிரிவு 247 (ஆ) 4 பிரகாரம் நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும்.

எடுத்திருக்கவில்லை. மேலும் நிலுவை மீதியில் 2022, 2021 மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுகளுக்குரிய நிலுவை மீதி ரூபா 153,000 தொகையாக காணப்பட்டது.		

2.2.4 வாடகை

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கடையறைகள் மற்றும் கட்டிடங்களை வாடகைக்கு கொடுப்பதன் மூலம் 59 அலகுகளில் இருந்து பெற வேண்டிய வாடகை ரூபா 2.56 மில்லியன் தொகை மா நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 253 (1) பிரகாரம் அறவீடு செய்திருக்காததுடன் நிலுவைத் தொகையில் 03 வருடங்களை மிகைத்துள்ள மீதி ரூபா 266,708 தொகையாக இருந்தது.	நிலுவைத் தொகையில் 2025 ஆண்டில் கடையறை வாடகை ரூபா 1.71 மில்லியன் தொகை அறவீடு செய்யப்பட்டது எனவும் மற்றும் வாடகை செலுத்தாமை தொடர்பாக கடையறைகளை முத்திரையிடப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது எனவும் மேலும் நிலுவைத் தொகையை பதிவழிப்பதற்காகவும் மற்றும் வழக்குகள் தாக்கல் செய்வதற்காகவும் நடவடிககை எடுக்கப்பட்டுள்ளது என.	சட்டத்தின பிரிவு 253(1) பிரகாரம் நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும்.

2.2.5 அனுமதிப்பத்திரக் கட்டணம்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 129 வியாபார அலகுகளில் இருந்து பெற வேண்டிய ரூபா 326,000 இற்கான வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம் மா நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 247 (ஆ) 4 பிரகாரம் அறவீடு செய்திருக்கவில்லை. நிலுவைத் தொகையில் ஒரு வருடத்தை விட மிகையான காலம் முதல் நிலுலவையாகக் காணப்பட்ட மீதி ரூபா 246,000 தொகையாகும்.	நிலுவைத் தொகையில் 2025 ஆண்டில் ரூபா 22,500 தொகை அறவீடு செய்யப்பட்டதுடன், மீதித் தொகையை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என.	சட்டத்தின பிரிவு 247 (ஆ) 4 பிரகாரம் நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய அறிவித்தல் பலகைக் கட்டணம் ரூபா 4.21 மில்லியன் தொகை அறவீடு செய்யப்பட்டிருக்காததுடன் அவற்றில் முன்னைய ஆண்டுகளுக்குரிய பெற வேண்டிய மீதி ரூபா 2.73 மில்லியன் தொகையாகும்.	நிலுவைத் தொகையில் 2025 ஆண்டின் போது ரூபா 310,610 தொகை அறவீடு செய்யப்பட்டுள்ளதுடன் மீதியை அறவீடு செய்வதற்காக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என.	நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும்.

(இ)	2022 ஜனவரி 27 திகதிய 2264/18 இலக்கங் கொண்ட அதிவிஷேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருந்த 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்திற்கு உரிய பந்தி I பகுதி (ஈ) இல் அடங்கக் கூடிய கைத்தொழில்களுக்காக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு அனுமதிப் பத்திரங்கள் புதுப்பிக்கப்படாத 16 நிறுவனங்கள் காணப்படாமையால் ரூபா 104,400 இற்கான வருமானமொன்றினை சபை இழந்திருந்தது. அதன் படி அதிகாரப் பிரதேசத்தில் செயற்படுத்தப்படுகின்ற அந்த வியாபாரங்களின் மூலம் சுற்றாடலுக்கு ஏற்படக் கூடிய சேதங்கள் தொடர்பாக ஒழுங்குறுத்தல் ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.	களப்பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு குறிப்பிட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது என.	சட்டத்திற்கு இணங்க கைத்தொழில்களுக்கான சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் புதுப்பிக்கப்பட வேண்டியதுடன் அதற்கான வருமானம் அறவீடு செய்ய வேண்டும்.

2.2.6 ஏனைய வருமானங்கள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய எழுத்தாணைக் கட்டணம், தண்ட வட்டி மற்றும் சேவை கட்டணம் முறையே ரூபா 840,277 தொகை, ரூபா 906,193 மற்றும் ரூபா 296,824 தொகை அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	எழுத்தாணைக் கட்டண நிலுவைத் தொகையில் ரூபா 120,852 தொகையும், வருடாந்த டென்டர் மூலம் வாடகைக்கு கொடுப்பதன் மூலம் ரூபா 33,041 தொகையும் சேவைக் கட்டண நிலுவையில் ரூபா 268,438 தொகை அறவீடு செய்யப்பட்டதெனவும் மற்றும் மீதியான நிலுவையை அறவீடு செய்வதற்கும் மேலும் மீதிகளை பதிவழிப்பதற்கும் மற்றும் வழக்குத் தாக்கல் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என.	நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயலாற்றுகை

மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டின் போது, வருடாந்த பாதீட்டின் மூலம் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்த கூட்டுப்பெறுமதி ரூபா 70 மில்லியனிற்கான வடிகால் முறைமை மதகுகள் மற்றும் வீதி அபிவிருத்தி அலுவல்கள் போலவே சபையின் 14 ஆதன அபிவிருத்தித் திட்டங்கள் மீளாய்வாண்டின் போது செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.	போதியளவு ஏற்பாடுகள் கிடைத்த பின்னர் எதிர்காலத்தில் இந்த அபிவிருத்தி அலுவல்கள் மேற்கொள்ளப்படும் என.	பாதீட்டு மூலம் ஏற்பாடு செய்திருந்த அபிவிருத்தி திட்டங்களை செயற்படுத்த வேண்டும்.
(ஆ)	2000 இன் 53 ஆம் இலக்க மற்றும் 1988 இன் 56 ஆம் இலக்க சட்டங்களின் மூலம் திருத்தப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட 2264/17 இலக்கங் கொண்ட 2022 ஜனவரி 27 ஆந் திகதிய அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலின் படி மா நகர சபையின் திண்மக் கழிவுப் பொருள் மத்திய நிலையத்திற்காக பெற்றுக் கொள்ளப்பட்ட சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தை புதுப்பிப்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	குப்பை மலை உரிய முறையில் தயாரிக்கப்பட்ட போதிலும் மண் பெற்றுக் கொள்ள முடியாமல் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள முடியாமல் இருந்தது என.	குறிப்பிட்ட சட்டத்தின் மற்றும் வர்த்தமானி அறிவித்தலின் படி சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(இ)	மத்திய சுற்றாடல் அதிகார சபையின் ஹம்பாந்தோட்டை மாவட்ட அலுவலகத்தின் உதவிப் பணிப்பாளரின் இலக்கம் CEA/SU/HM/MHB/SZ/C36/2912/2021 மற்றும் 2023 நவம்பர் 07 திகதிய கடிதத்தின் மூலமும் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட களப்பரிசோதனையின் போது மலக் கழிவுப்பொருள் சுத்திரகரிப்பு முறைமையொன்று செயற்திறனுடன் செயற்படவில்லை எனவும், அந்த முறைமை செயற்திறனுடன் செயற்படக்	சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பம் மற்றும் அதன் செய்முறையை அறிவிக்கும் படி வேண்டியபோதிலும் இதுவரை எழுத்துமூலம் அறிவித்திருக்கவில்லை என.	மலக் கழிவுப் பொருள் சுத்திகரிப்பு முறைமைக்காக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டும்.

கூடியவாறு முன்னேற்றப்பட வேண்டுமெனவும் மலக்கழிவுப் பொருள் சுத்திகரிப்பு முறைமைக்காக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டியிருந்ததென சுட்டிக் காட்டப்பட்டிருந்த போதிலும் 2024 திசெம்பர் 31 திகதியளவிலும் அந்த அலுவல்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

3.2 முகாமைத்துவத் திறமையின்மை

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் படி ஆரம்ப சம்பளம், வாழ்க்கைப்படி விஷேட படி மற்றும் ஏனைய சமமான கொடுப்பனவுகள் என்பவற்றை கூட்டி மொத்த மாதாந்த உழைப்புகளில் இருந்து குறைந்தளவு ஊழியரிடம் 8 சதவீதம் மற்றும் சேவை வழங்குனரினால் 12 சதவீதமாக பங்களிப்புத் தொகை செலுத்த வேண்டியிருந்த போதிலும் மா நகர சபையினால் பிரதியீட்டு ஊழியர்களுக்காக ஆரம்ப சம்பளத்தை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு பங்களிப்புத் தொகை செலுத்தப்பட்டிருந்தது.	தாபனக் கோவையின் மற்றும் 24/2018 சுற்றறிக்கையின் படி கணித்தல் மேற்கொள்ளப்பட்டது என.	சட்டத்தின் படி பங்களிப்புத் தொகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	சபையில் கடமையாற்றும் பிரதியீட்டு/ ஒப்பந்த ஊழியர்களுக்காக ஊழியர் சேமலாப நிதிய பங்களிப்புத் தொகை 2022 ஆண்டு முதல் 2024 ஆண்டுவரை கூட்டுத்தொகை ரூபா 1.13 மில்லியன் சேமலாப நிதியத்திற்கு செலுத்தாமல் சபையின் பொது வைப்புக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.	அனைத்து அங்கத்துவ இலக்கங்களும் பெற்றுக் கொள்ளப்பட்ட பின்னர் பொது வைப்புக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பங்களிப்புத் தொகை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	அறவீடு செய்யப்படுகின்ற பங்களிப்புத் தொகை ஊழியர் சேமலாப நிதியத்திற்கு தாமதமின்றி செலுத்தப்பட வேண்டும்.
(இ)	1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சட்டத்தின் பிரகாரம் 2014 ஏப்ரல் முதல் 2022 திசெம்பர் வரையான காலப் பகுதியில் ஊழியர்களின் பங்களிப்பு தொகை உரிய முறையில் செலுத்தப்படாமையால் ரூபா 425,560 இற்கான மிகைவிதிப்பு தொகையொன்று	ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய சபையுடன் கலந்துரையாடி அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்படும் என.	மிகை விதிப்பு செலுத்துவதற்கான காரணத்தை கண்டறிந்து அதற்கு பொறுப்பான தரப்பினரிடம் அறவீடு செய்யப்பட வேண்டும்.

	செலுத்தப்பட்டிருந்ததுடன், அதற்கான காரணத்தை கண்டறிந்து பொறுப்பான தரப்பினரிடம் அறவீடு செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.		
(ஈ)	நான்கு கடை அறைகள் தொடர்பாக வைப்புச் செய்யப்பட்டு 5 வருடங்களை மிகைத்துள்ள ஒரே தடவையில் பெறும் பணம் ரூபா 1.34 மில்லியன் தொகையினை வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை.	ஒரே தடவையில் பெறும் பணம் சபையின் வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	ஒரே தடவையில் பெறும் பணம் சபையின் வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.3 செயற்பாட்டுத் திறமையின்மை

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
2017 ஆண்டு ஆதனங்களின் பெறுமதி மதிப்பீட்டு அலுவல்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்த 13 ஆம் இலக்க பிரிவில் அமைந்துள்ள ஹம்பாந்தோட்டை துறைமுகம் அமைந்துள்ள விஷேட ஆதன பெறுமதி மதிப்பீட்டு அலுவல்கள் மீளாய்வாண்டு இறுதி வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்காததுடன் அதற்காக 07 வருட காலம் தாமதம் ஏற்பட்டிருந்தது. 2025 ஏப்ரல் 08 ஆம் திகதிய அரச பெறுமதி மதிப்பீட்டு அறிக்கையின் படி 2017 ஆண்டிற்கு உரிய ஆதனத்தின் வருடாந்த பெறுமதி ரூபா 2,030.77 மில்லியன் தொகையாக காணப்பட்டமையால் வருடாந்த வீதவரி வருமானம் ரூபா 142.15 மில்லியன் தொகையாக காணப்பட்ட வேண்டியிருந்தும் அது மா நகர சபையின் ஒட்டுமொத்த மீண்டுவரும் வருமானத்திற்கு நெருங்கிய பெறுமதியொன்றினை கொண்டிருந்த வருமான மூலமொன்றாக காணப்பட்டது.	2020 முதல் 2025 முதலாவது காலாண்டிற்கான வரி அறவீடு செய்வதற்கு உரிய முறையில் பெறுமதி மதிப்பீட்டு அறிக்கைகள் கிடைக்கவில்லை எனவும் 2025 மார்ச் 08 திகதிய பெறுமதி மதிப்பீட்டு அறிக்கையின் படி 2025 இரண்டாம், மூன்றாம் மற்றும் நான்காம் காலாண்டுகளுக்கான வரி செலுத்தும் படி அறிவித்து கடிதம் அனுப்பப்பட்டது என.	விஷேட ஆதனங்கள் தொடர்பாக பெறுமதி மதிப்பீடு காலரீதியாக மேற்கொள்ளப்பட்டு வீதவரி அறவீடு செய்ய வேண்டும்.

3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2013 முதல் 2021 ஆண்டு ஏப்ரல் வரை நகர அபிவிருத்தி அதிகார சபையினால் மா நகர சபைக்கு வழங்கியிருந்த இரண்டு உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களுக்காக நீர் வழங்குதல் மாவட்டச் செயலகத்தின் பிரதான நீர் வழங்கள் ஊடாக மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அந்த காலப்பகுதிக்காக குறிப்பிட்ட நகர பிதாவின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தின் ரூபா 311,462 தொகை மற்றும் நகர ஆணையாளரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தின் ரூபா 163,618 தொகை ஆக கூட்டுத்தொகை ரூபா 475,080 இற்கான நிலுவை நீர்க் கட்டணமொன்று காணப்பட்ட போதிலும் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தை பயன்படுத்திய தரப்பினரிடம் அந்த பணத்தை அறவீடு செய்து தீர்ப்பதற்கு சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	வீட்டை பயன்படுத்திய தரப்பினர்களுக்கு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டது எனவும் மற்றும் நகர ஆணையாளரின் உத்தியோக பூர்வ வாசஸ்தலத்தில் இருந்து ரூபா 16,298 தொகை அறவிடப்பட்டிருந்தது என.	நீர் பில்பத்திரங்கள் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தை பயன்படுத்திய தரப்பினரிடம் அறவீடு செய்து தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	இலக்கம் ஹபபா/சீ/06/13/காணி/அபி/கை.பொது மற்றும் 2019 நவம்பர் 22 திகதிய தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரை விழித்த ஹம்பாந்தோட்டை உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் கடிதத்தின் மூலம் 30 ஏக்கர்களுக்கான சேதனப் பசளை செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த காணி (ருஹுணு பண்ணை அருகில்) தீர்த்துக் கொள்வதற்கு தேவையான தகவல்கள் அனுப்பப்பட்டிருந்த போதிலும், அதன் பின்னர் காணியை உரித்தாக்குவதற்குரிய நடவடிக்கைகள் இதுவரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.	குறிப்பிட்ட காணியை உரித்தாக்கித் தரும்படி கடிதத்தின் மூலம் வேண்டப்பட்டுள்ளது என.	காணியை உரித்தாக்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(இ)	2023 ஆம் ஆண்டின் நிலையான சொத்துக்கள் கணிப்பீட்டு அறிக்கையின் படி 2024 திசெம்பர் 31 திகதி அளவில் சபையினால் பயன்படுத்தப்படுகின்ற 25 காணிகளை சபையின் பெயரில் உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	குறிப்பிட்ட காணிகளை உரித்தாக்கித் தரும்படி வேண்டப்பட்டுள்ளது என.	சபைக்குச் சொந்தமான பயன்படுத்தப்படுகின்ற காணிகளை சபையின் பெயரில் உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஈ)	2017 ஆண்டளவில் திண்மக் கழிவுப் பொருள் மத்திய நிலையத்திற்கு கிடைத்திருந்த பிளாஸ்டிக் உடைக்கும் மற்றும் கழுவும் இயந்திரத்தின் மூலம் அதற்குரிய கருமங்கள் நிறைவேற்றப்படாமல் விளைவற்று கட்டிடத்தினுள் வைக்கப்பட்டிருந்தது.	பிளாஸ்டிக் வகைப்படுத்துவதற்காக தேவையான அறிவு மற்றும் பயிற்சியுடைய ஊழியர்கள் காணப்படாமை மற்றும் அதற்கு செலவிடக் கூடிய பணத்திற்கு ஏற்ப வருமானமொன்று கிடைக்காமையால் இயந்திரம் பயன்படுத்தப்படவில்லை என.	இயந்திரம் விளைவற்று வைத்திருக்காமல் பயன்படுத்த வேண்டும்.

3.5 மனிதவள முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
2001 ஆகஸ்ட் 22 ஆந் திகதிய 18/2001 கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கையின் படி 05 வருடங்களை மிகைத்து ஒரே சேவை நிலையத்தில் கடமையாற்றிய அனைத்து உத்தியோகத்தர்களும் ஏனைய சேவை நிலையங்களுக்கு சேவையாற்றுவதற்காக இடமளித்தலுக்காக இடமாற்றங்கள் வழங்கப்பட வேண்டிய போதிலும் சபையில் கடமையாற்றுகின்ற 08 உத்தியோகத்தர்கள் 05 வருடங்கள் முதல் 10 வருடங்கள் வரையான காலப் பகுதியில் ஒரே சேவை நிலையத்தில் சேவையாற்றுதல் அவதானிக்கப்பட்டது.	முறைப் பிரகாரம் இடமாற்றக் கொள்கையொன்று செயற்படுத்தப்படாமை இதற்கு காரணம் எனவும் 05 வருடங்களை மிகைத்துள்ள உத்தியோகத்தர்களுக்கு இந்த முறையும் வருடாந்த இடமாற்றத்திற்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது என.	ஒரே சேவை நிலையத்தில் 05 வருட சேவைக் காலம் முடிவடைந்துள்ள உத்தியோகத்தர் தொடர்பாக சுற்றறிக்கை ஏற்பாடுகளின் படி செயற்பட வேண்டும்.

3.6 வாகனப் பயன்பாடு

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2016 திசெம்பர் 29 திகதிய 30/2016 இலக்கங் கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் எரிபொருள் எரிவுப்பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் சபைக்கு சொந்தமான வாகனங்களில் 02 வாகனங்கள் தொடர்பாக அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை.	எரிபொருள் எரிவுப் பரிசோதனை விரைவாக மேற்கொண்டு கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படும் என.	குறிப்பிட்ட சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் எரிபொருள் எரிவுப்பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டும்.

(ஆ)	சபையின் அன்றாட கடமைகளுக்காக தேவையான சபைக்கு சொந்தமான 03 வாகனங்களை திருத்த வேலை மேற்கொண்டு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன் 04 வாகனங்களின் உரிமையை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	ஒரு வாகனத்தின் திருத்த வேலைக்காக அங்கீகாரம் கோரப்பட்டுள்ளதுடன் மீதியான இரண்டு வாகனங்களின் திருத்த வேலை அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் 03 வாகனங்களை உரித்தாக்குவதற்குரிய அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என மற்றும் ஒரு வாகனத்தை அப்புறப்படுத்துவதற்கு அங்கீகாரம் கோரப்பட்டுள்ளது என.	அன்றாட கருமங்களுக்காக தேவையான வாகனங்களின் திருத்த வேலை மேற்கொள்வதற்கும் மற்றும் உரித்தாக்குவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4 கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	ஏனைய வருமானங்கள், வருமான உதவிகள் மற்றும் மூலதன பெறுவனவுகள் ஆகிய 03 விடயங்களில் பிரதிகூலமான முரண்கள் ரூபா 100.08 மில்லியன் தொகை காணப்பட்டதுடன், அதன் முரண் 23 சதவீதம் முதல் 98 சதவீதமிடையே காணப்பட்டது.	முரண்களை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	முரண்களை குறைப்பதற்கும், திட்டமிடலை முறைப்படுத்துவதற்கும், வருமானம் சேகரிப்பதற்கும் செயற்திறனுடன் மேற்கொள்வதற்கும், நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	உதவி நிதி செலவு விடயத்தில் பிரதிகூலமான முரண்கள் ரூபா 432,846 தொகையாக காணப்பட்டதுடன் அதன் முரண் 156 சதவீதமாக காணப்பட்டது.	முரணை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	முரண்களை குறைக்கப்பட வேண்டியதுடன் அதற்காக திட்டமிடல் முறைப்படுத்தப்பட வேண்டும்.

4.2 சுற்றாடல் சிக்கல்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	சேதனப்பசளை உற்பத்திக்காக எடுத்துவரப்படுகின்ற நகர்சார் திண்மக் கழிவுப்பொருள் குப்பை மழை ஒன்றாக காணப்படுவதுடன் வனக் காப்புப் பிரதேசத்திற்கு அண்மையில் பாரிய நிலப்பரப்பு ஒன்றில் திறந்த நிலையில்	மண் பெற்றுக் கொள்வதற்காக பிரதேச செயலகத்தினால் அங்கீகாரம் பெற்றுக் கொள்ள முடியாமை மற்றும் போது போதியளவு குறிப்பிட்ட அங்கீகாரம்	திறந்த வெளியில் குவித்து வைக்காமல் திண்மக் கழிவுப் பொருள் உரிய முறையில் முகாமைத்துவம் செய்யப்பட வேண்டும்.

	குவிக்கப்பட்டு இருந்ததனால் அங்கு பாரிய அளவில் நடமாடும் நாய்கள் மற்றும் பறவைகளினால் பொலிதீனுடனான உணவுப் பகுதிகள் இழுக்கப்பட்டு காணப்பட்டது.	கிடைக்கப்பெறாமையின் காரணமாக அந்த கருமம் உரிய முறையில் மேற்கொள்ள முடியவில்லை என.	
(ஆ)	மீள்சுழற்சி செய்ய முடியாத பண்டங்களை வேறாக்கி அவற்றை மாத்திரம் உடலாரோக்கிய குப்பை தேக்கமொன்றில் இடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் சந்தை வளாகத்தில் அகற்றப்பட்ட உக்கிய குப்பைகளும் திறந்தவெளியில் குவிக்கப்பட்டு தரை நிறப்புவதற்காக பயன்படுத்தப்பட்டு இருந்தது. அதே போல் இலத்தரனியல் கழிவுப் பொருட்கள் மற்றும் கொள்கலன்கள் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள மின்குமிழ்கள் (CFL, டியூப் லய்ட்) அப்புறப்படுத்துவதற்காக முறையான வேலைத் திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.	உக்காத குப்பைகளை உடலாரோக்கிய குப்பை தேக்கத்தில் போடப்படுவதுடன் மற்றும் இலத்தரனியல் கழிவுப்பொருட்கள் சேகரிக்கப்பட்டு அப்புறப்படுத்துவதற்கு முறையான செய்முறையொன்று இதுவரை வழங்கப்பட்டிருக்கவில்லை என.	மீள்சுழற்சி செய்ய முடியாத பண்டங்களை அப்புறப்படுத்தும் செய்முறைகள் முறைப்படுத்த வேண்டும்.
(இ)	அதிகாரம் 252 மா நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 129 இன் பிரகாரம் மல கழிவுப் பொருள் சுத்தரிப்பு முறைமையொன்று செயற்திறனுடன் பேணிச் செல்ல வேண்டிய போதிலும் நீர் சுத்திகரிப்பு செய்யும் செய்முறை இதற்கு 05 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் செயற்படாததுடன், அங்கு காணப்படும் நீர் வடிகட்டியும் செயற்படாமல் காணப்படுதல் அவதானிக்கப்பட்டது. மேலும் சுத்திகரிக்கப்படாமல் வெளியேற்றப்படும் நீர் அண்மையிலுள்ள கிடங்கொன்றில் விடுவிக்கப்பட்டு, அதனனூடாக மழை காலங்களில் வனப் காப்பு பிரதேசத்தில் ஓடிச் செல்லப்பட்டு காணப்பட்டது.	நீர் குளத்தில் பயிர் செய்கைக்காக நீர் பெற்றுக் கொள்வதுடன் மழை காலங்களில் குளத்திலிருந்து நீர் வெளியே ஓடிச் செல்கின்றது என.	மல கழிவுப் பொருள் சுத்திகரிப்பு முறைமை முறைப்பிரகாரம் பேணிச் செல்லப்பட வேண்டும்.
(ஈ)	சேதனப் பசளை செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள 30 ஏக்கர் காணியில் 40 பர்சஸ்கள் தனியார் கம்பனி ஒன்றிற்கு வழங்கப்பட்டு அந்த காணியில் நிறுவப்பட்டுள்ள இன்சினரேடர் இயந்திரத்தின் இரசாயனக் கழிவுப் பொருள் எரிக்கும் செயற்திட்டமொன்றின் மூலம்	கணக்காய்வு அவதானிப்புக்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது என.	சுற்றாடலுக்கு ஏற்படுகின்ற தாக்கம் தொடர்பாக சாத்தியக்கூறு ஆய்வொன்று மேற்கொள்ளப்பட வேண்டும்.

சுற்றாடலுக்கு ஏற்படுகின்ற தாக்கம் தொடர்பாக சாத்தியக்கூறு ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டது என உறுதிப்படுத்துவதற்கு தேவையான தகவல்கள் சபையிடம் காணப்படவில்லை.		

4.3 நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
மா நகர சபையினால் 09 நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள் இனங்கண்டிருந்ததுடன் அவற்றில் அதிகாரப் பிரதேசத்தில் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திகள் தவிர இரண்டு குறிக்கோள்கள் தொடர்பாக 03 தொழிற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. மேலும் 03 குறிக்கோள்கள் தொடர்பாக நான்கு தொழிற்பாடுகளின் பௌதீக முன்னேற்றம் 0-49 இடையே குறைந்த சதவீதமொன்றில் நிலவியது.	அவதானிப்புக்களை ஏற்றுக் கொள்ளப்படுகின்றது எனவும் மற்றும் பல்வேறு விடயங்கள் காரணமாக தொழிற்பாடுகளை நிறைவேற்ற முடியாமல் போனது என.	நிறுவனத்தில் நிறுவப்பட்டுள்ள நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களை நோக்கி குறிப்பிட்ட காலப் பகுதியில் நெருங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.